சாட்சிகளின் வாக்குமூலம்
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**அ.வ.எண். 105/2022**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
வாக்குமூலம் – வா.சா–1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனிச்சாமி | மதம் | : | இந்து |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | பல்லடம் | மாவட்டம் | : | திருப்பூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025 ஆண்டு ஜனவரி மாதம் 23ம் நாள் சாட்சியம்.

---

முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் 2ம் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை நிருபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும், படித்துப்பார்த்து தான் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்க்கண்ட ஆவணங்கள்

1. 28.07.2004 தேதியிட்ட நாச்சிமுத்து என்பவருக்கு ரத்தினசாமி வகையறா ஏற்படுத்திக்கொடுத்த கிரைய ஆவணம் சான்று நகல்.

2. 28.07.2004 தேதியிட்ட ரத்தினசாமிக்கு சுப்பராய கவுண்டர ஏற்படுத்திக்கொடுத்த கிரைய ஆவண சான்று நகல்.

3. 30.05.2013 தேதியிட்ட வாதிகள் மற்றும் அவர்களது தாயார் ஆகியோருக்கிடையேயான பாக சாசன ஆவண சான்று நகல்.

4. 04.08.2022 தேதியிட்ட க.ச.865/3D கணினி சிட்டா பதிவிறக்க நகல்.

5. 08.08.2022 தேதியிட்ட க.ச.865/3C கணினி சிட்டா பதிவிறக்க நகல்.

6. தாவா நான்காம் அயிட்ட சொத்தில உள்ள தடத்தை காட்டும் வரைபடம் பதிவிறக்க நகல்.

7. 27.07.2015 தேதியிட்ட இரண்டாம் வாதிக்கு நந்தவனம்பாளையம் ஊராட்சி அவரது பூமிக்கு செல்ல பைப்லைன் அமைக்க அனுமதி கடிதம்.

8. தாவா சொத்தினை பிரதிவாதிகள் கற்களை கொண்டு அடைத்துள்ளதை காட்டும் புகைப்படங்கள் 2, குறுந்தகடு மற்றும் ரசீது.

9. இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 65B சான்றிதழ்.

ஆகியவற்றை வாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். மேற்படி ஆவணங்கள் முறையே **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9** ஆவணங்கள் ஆக குறியீடு செய்யப்படுகின்றன.

<u>**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.01.23 18:09:30 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.